07 டிசம்பர், 2013

# “அம்பலப்படுத்தும் காமிராக்கள் வாடகைக்கு” –அருண் ஜெட்லி

எதிர்க்கட்சித் தலைவர், மாநிலங்களவை

இன்றைய ‘தி எகனாமிக் டைம்ஸ்’ இதழில் “கடன் பற்றாக்குறையை அம்பலப்படுத்தும் நடவடிக்கைகளின் அரசர்கள் சமாளிப்பார்களா?” என்ற தலைப்பில் 4 பக்க அறிக்கை ஒன்று வந்துள்ளது.

குறிப்பிட்ட அளவிலான வலைத்தளங்கள் சமீப ஆண்டுகளாகப் பெருகிவருவதுதான் கட்டுரையில் சாராம்சம். அவற்றில் பெரும்பாலானவை, அம்பலப்படுத்தும் நடவடிக்கைகளில் நிபுணத்துவம் வாய்ந்தவை. இவை நீடிப்பதற்கோ அல்லது பிழைப்பதற்கோ எந்த நிதி ஆதாரமும் இல்லை. தற்போது இவர்கள் தங்களை சங்கங்களாகவும், லாப நோக்கற்ற அமைப்புகளாகவும் பதிவு செய்து கொள்கிறார்கள். இதன் மூலம் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் வெளிப்படையான நிறுவனமாகச் செயல்படுவதை தவிர்க்கிறார்கள். ஒரு நிறுவனம் என்றால் முறையாகக் கணக்குகளைப் பராமரித்து, நிறுவனங்களின் பதிவாளரிடம் ஆண்டுதோறும் கணக்குகளின் அறிக்கையையும், பாலன்ஸ் ஷீட்டுகளையும் தடை செய்ய வேண்டும். இவற்றை எந்த நபரும் பெற்றுக்கொள்ள முடியும். ஆகவே நிறுவனத்தின் நிதி ஆதாரங்களை வெளிப்படையாக வைத்திருக்க வேண்டும். இயக்குபவர் நிறுவனமாக இல்லை என்றால் இந்த வசதி வழங்கப்படாது.

இவற்றில் ஏராளமான வலைத்தளங்கள் காங்கிரஸ் அல்லாத தலைவர்களைக் குறிவைக்கின்றன என்று நான் ஏற்கனவே கூறியிருக்கிறேன். அவர்களது முக்கிய இலக்கு நரேந்திர மோதி என்பதில் கேள்விக்கே இடமில்லை. சமீபத்தில், இது போன்று ஆம் ஆத்மி கட்சிக்கு எதிராக நடத்தப்பட்ட குறி மீதான விசாரணை நடந்தது. நிதி ஆதாரம் இல்லாததால் இந்த வலைத்தளங்கள் நன்கொடைகளை நம்பியிருக்கின்றன.

புலப்படாத, வெளிப்படையற்ற நிதி வழங்கலால் எந்த நிறுவனத்தின் மீதும் சந்தேகம் கொள்ள முடியும். இது போன்ற அமைப்புகள் நன்கொடையாளரால் இயக்கப்படுபவையாகவும் இருக்கலாம். உண்மை என்னவென்றால் நம்பகத்தன்மை குறித்த முக்கிய பிரச்சினை ஏற்படும் என்பதால், அரசும், காங்கிரஸ் கட்சியும் இந்த வலைத்தளங்களால் குறிவைக்கப்படுவதில்லை. அறப்போர் என்ற முகமூடி நாடகங்களை நடத்துபவர்கள், சுத்தமானவர்களாக இருக்க வேண்டும்.அவர்கள் மக்கள் பார்வைக்கு சில உண்மைகளை அம்பலப்படுத்தும் விதமாக, மற்றவர்களைப் பற்றிய வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். எனினும், இவர்களது சுய பிழைப்பு, தெரியாத வழிகளைச் சார்ந்து உள்ளது. இவைகளின் குறிப்பிட்ட இலக்குகள், நோக்கங்கள், நிதி ஆதாரங்கள் ஆகியவை குறித்த முழு விவரங்களை மக்கள் முன்பு, இந்த வலைத்தளங்கள் சமர்ப்பிக்க இதுவே நேரம்.

இல்லையென்றால் இவை மீதான “அம்பலப்படுத்தும் காமிராக்கள் வாடகைக்கு” என்ற சந்தேகம் தொடரவே செய்யும்.